தூது
நற்செய்தி துணுக்குகள்

சி. எஸ். ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

# வேதத்தில் வளருவோம்

உன் கிரியைகளை
அறிந்திருக்கிறேன்,
உனக்குக் கொஞ்சம் பெலன்
இருந்தும், நீ என் நாமத்தை
மறுதலியாமல், என் வசனத்தைக்
கைக்கொண்டபடியினாலே,
இதோ, திறந்தவாசலை உனக்கு
முன்பாக வைத்திருக்கிறேன்,
அதை ஒருவனும் பூட்டமாட்டான்.

வெளிப்படுத்தின விசேஷம் 3:8

## அக்டோபர் - 2026
## (மடல் - 26) செய்தி - 9

# பொருளடக்கம்


ஆயர் மடல் ........ 1

ஆயரம்மா மடல் ........ 3

பெண்கள் பகுதி ........ 4

Children's Corner ........ 8

வேத வினாக்கள் ........ 19

கோதுமை மணி ........ 22

துணுக்குகள் ........ 24

ஆலயப் பக்கம் ........ 26

# ஆயர் மடல்
## வேதத்தில் வளருவோம்

"நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்." 1 பேதுரு 2:3

ஒரு குழந்தை பிறந்தவுடன் அதன் வளர்ச்சிக்கு உணவு மிகவும் அவசியம். உணவுயில்லாமல் குழந்தை உடல் ரீதியாக வளர முடியாது. அதுபோலவே, ஒரு கிறிஸ்தவனின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் கர்த்தருடைய வார்த்தை மிகவும் அவசியமானது. பேதுரு, "புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல" என்று கூறுகிறார். குழந்தை தன்னுடைய உணவாகிய பாலை எவ்வாறு வாஞ்சையோடு தேடுகிறதோ, அதுபோல ஒவ்வொரு விசுவாசியும் கடவுளுடைய வார்த்தையை வாஞ்சையோடு தேட வேண்டும். வேதத்தை வைத்திருப்பது மட்டும் போதாது. வேதத்தை வாசிக்க வேண்டும், வேதத்தின் மீது வாஞ்சிக்க வேண்டும், வேதத்தின்படி வாழ வேண்டும். அதுதான் நமது வாழ்க்கையில் உண்மையான ஆவிக்குரிய வளர்ச்சி ஏற்படும்.

### 1. வேதத்தை வாசிப்போம்

"மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்." - மத்தேயு 4:4

உடலுக்கு உணவு தேவைப்படுவது போல, ஆத்துமாவுக்கு கடவுளுடைய வார்த்தை தேவை. நாம் தினமும் உணவு உண்பதைப் போலவே, தினமும் வேதத்தை வாசிக்கும் பழக்கத்தையும் உருவாக்க வேண்டும். வேதத்தை வாசிப்பது நமது வாழ்க்கையின் ஒரு முக்கிய பங்காக இருக்கவேண்டும். நேரம் கிடைத்தால் வேதம் வாசிப்பது அல்ல, வேதம் வாசிப்பதற்காகவே நேரத்தை ஒதுக்க வேண்டும். சில நேரங்களில் நாம் வேதத்தை அதிகமாக அறிந்திருக்கிறோம் என்று நினைக்கலாம். ஆனால் கடவுளுடைய வார்த்தை எவ்வளவு ஆழமாகயிருக்கிறதோ, அவ்வளவு அதிகமாக நாம் அதில் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

"உமது வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது."- சங்கீதம் 119:105. வேதம் நமது பாதைக்கு வெளிச்சம் தருகிறது. நாம் எங்கு செல்ல வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும், எவ்வாறு வாழ வேண்டும் என்பதை கர்த்தருடைய வார்த்தை நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. ஆகவே, வேதத்தை தினமும் வாசிப்போம்.

### 2. வேதத்தை வாஞ்சிப்போம்

"......ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்." 1 பேதுரு 2:3

வேத்தை தினமும் வாசித்தால் மட்டும் போதாது, வாசித்த வார்த்தையின் மீது நமக்கு தாகமும், விருப்பமும் அதிகரிக்க வேண்டும். ஒரு குழந்தைக்கு உணவு (பால்) கொடுக்காமலிருந்தால் அது அழுதுகொண்டேயிருக்கும். ஏனென்றால் அதற்கு உணவு (பால்) தேவை என்பதை அது உணர்கிறது. அதுபோலவே, கடவுளுடைய வார்த்தையாகிய வேதத்தை வாசிக்காமலிருந்தால் நமது உள்ளத்தில், "நான் வேதத்தை இன்று

வாசிக்கவேண்டுமே” என்ற வாஞ்சை உருவாகவேண்டும். எரேமியா 15:16ல் இவ்வாறு கூறுகிறார் “உமது வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன் உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது”. கடவுளுடைய வார்த்தையடங்கிய வேதாகமம், நமக்கு மகிழ்ச்சியாகவும், ஆறுதலாகவும், வழிகாட்டியாகவும் இருக்கிறது. எனவே அனுதினமும் வேதாகமத்தை திறந்து கர்த்தருடைய வார்த்தையை படிக்கவேண்டும் என்கிற வாஞ்சை நம்முடைய இருதயத்தில் அதிகரிக்கவேண்டும்.

**3. வேதத்தின்படி வாழ்வோம்**

“திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.” - யாக்கோபு 1:22 வேதத்தை வாசிப்பது அறிவைத் தருகிறது. வேதத்தை வாஞ்சிப்பது உறவை வளர்க்கிறது. ஆனால் வேதத்தின்படி வாழ்வது நமது வாழ்க்கையை மாற்றுகிறது. வேதத்தில் நாம் கற்றுக்கொண்ட அன்பை நம்முடைய வாழ்க்கையில் எல்லாரிடமும் அன்புடன் நடந்துகொள்ள அர்ப்பணிக்கவேண்டும். மன்னிப்பைப் பற்றி படிக்கும்போது மன்னிக்கும் குணாதிசயம் நம்மில் வெளிப்படவேண்டும். தாழ்மையைப் பற்றி கற்றுக்கொளளும் போது தாழ்மையின் குணம் நமது வாழ்வில் வார்த்தையிலும், நடத்தையிலும் பிறர் காணவேண்டும். ஜெபத்தைப் பற்றி கற்றுக்கொள்ளும்போது அனுதின வாழ்வில் நமக்காக, பிறருக்காக, தேசத்திற்காக, ஊழியத்திற்காக, திருச்சபைக்காக ஜெபிக்கிற அனுபவம் நமக்குள் உருவாக வேண்டும். அன்பைப் பற்றி கற்றுக்கொண்டால் பிறரை அன்புடன் நடத்த வேண்டும். ஆனால் வேதத்தை அனுதினமும் வாசித்து, வாஞ்சித்து வாழ்கின்ற நாம் இவைகளை பிறரிடமே எதிர்பார்க்கிறோம். முதலில் வாசிக்கிற, வாஞ்சிக்கிற நம்முடைய வாழ்வை அதின்படி செய்ய அர்ப்பணிக்கும்போது நிச்சயம் கடவுளுடைய வார்த்தையாகிய வேதம் நம்மில் பெருக்கத்தை தரும்.

**“வேதத்தில் வளர்வோம், வாழ்வில் மலர்வோம்,**

**கிறிஸ்துவோடு இணைந்து, கனிகளைத் தருவோம்”**

கர்த்தர் தாமே உங்களையும , உங்கள் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். நீங்கள் நம்முடைய திருச்சபையின் ஊழியங்களுக்காக ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : esp.rgt@gmail.com*

**இவண்**
**கிறிஸ்துவின் திருபணிவிடையாளன்**
**அருள்திரு.S.பிரபுதாஸ்**

# ஆயரம்மா மடல்
# சூனேமியாளின் ஜெபம்
## 2 இராஜாக்கள் 4:8-37

சூனேமியாளுக்கு எல்லாமே இருந்தது. ஆனால் ஒரு பிள்ளை இல்லை. கடவுள் அவளுடைய மனதில் மறைந்திருந்த ஏக்கத்தை அறிந்து, எலிசா தீர்க்கன் இறைவாக்கு உரைத்ததின் மூலம் அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். ஆனால் பெற்ற ஆசீர்வாதமே ஒருநாள் அவளுடைய சோதனையாக மாறியது. அவள் மகன் இறந்தபோது, அவள் நம்பிக்கை இழக்காமல் கடவுளுடைய மனிதனைத் தேடிச் சென்றாள். அவளுடைய கண்ணீர் ஜெபமாக மாறியது. அவளுடைய ஜெபம் அற்புதத்திற்கு வழியாக மாறியது.

**1. ஜெபத்தின் மேன்மை – நெருக்கடியான சூழ்நிலையில் - 2 இராஜாக்கள் 4:22–25**

தன் மகன் இறந்தபோதும் சூனேமியாள் மனிதர்களிடம் புலம்பிக் கொண்டிருக்கவில்லை, கடவுளுடைய மனிதனைத் தேடி ஓடினாள். அவள் பெற்ற ஆசீர்வாதத்தைவிட, ஆசீர்வாதத்தைத் தந்த கடவுளைப் பற்றிக்கொண்டாள். இதுதான் அவளுடைய ஜெபத்தின் மேன்மை. நம் வாழ்க்கையிலும் பிரச்சினை வரும்போது, முதலில் மனித உதவியைத் தேடாமல் தேவனைத் தேட கற்றுக்கொள்ள வேண்டும். சூழ்நிலை நம்மை உடைத்துவிடாமல், கடவுளுடைய சந்நிதிக்குள் அழைத்துச் செல்ல வேண்டும். சங்கீதம் 46:1ல் படிக்கிறோம் - “கடவுள் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவா”.

**2. ஜெபத்தின் தாக்கம் – அழுகை சாட்சியாக மாற்றியது - 2 இராஜாக்கள் 4:32–35**

சூனேமியாளின் வீட்டில் மரணம் வந்தது, ஆனால் அவளுடைய விசுவாசம் மரிக்கவில்லை. அவள் தன் மகனை தீர்க்கதரிசியின் படுக்கையில் வைத்துவிட்டு, கடவுளுடைய செயலுக்காக காத்திருந்தாள். அவளுடைய ஜெபமும் , விசுவாசமும் அந்த வீட்டின் சூழ்நிலையை மாற்றியது. இன்று ஒரு தாய் தன் பிள்ளைக்காக ஜெபிக்கும்போது, அவள் இன்று காண்பதை மட்டும் அல்ல, பிள்ளையின் எதிர்காலத்தையும் கடவுளுடைய கைகளில் ஒப்படைக்கிறாள். ஒரு பெண்ணின் ஜெபம் அவளுடைய வீட்டிற்குள் மட்டும் நிற்காது. அதையும் தாண்டி அடுத்த தலைமுறையையும் தொடுகிறது. சங்கீதம் 112:2ல் படிக்கிறோம் கடவுளுடைய கட்டளைகளில் பிரியமாயிக்கிற மனுஷனுடைய சந்ததி பூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்.

**3. ஜெபத்தின் வல்லமை – இழந்ததை மீண்டும் கிடைத்தது - 2 இராஜாக்கள் 4:36–37**

எலிசா ஜெபித்தபோது, அந்த சிறுவன் உயிர்பெற்றான். மரணம் தான் முடிவு என்று தோன்றிய இடத்தில், கடவுள் உயிரைத் திரும்பக் கொடுத்தார். சூனேமியாளின் ஜெபம் சூழ்நிலையின் கடைசியான வார்த்தையை ஏற்றுக்கொள்ளவில்லை. கடவுளுடைய வல்லமையை நம்பியது. நம்முடைய வாழ்க்கையிலும் சில கதவுகள் மூடப்படலாம், சில கனவுகள் இறந்துபோனதுபோல் தோன்றலாம். ஆனால் ஜெபிக்கும் மனிதனுக்கு “முடிவு” என்று தோன்றும் இடத்திலும், கடவுள் ஒரு புதிய ஆரம்பத்தை உருவாக்கித் தர வல்லவராக இருக்கிறார். யாக்கோபு 5:16ல் பார்க்கிறோம் - “நீதிமான் செய்யும் ஊக்கமான விண்ணப்பம் மிகவும் வல்லமையுள்ளது.”

**இறைபணியில்**
**ஆ. ஜெஸிந்தா பிரபுதாஸ்**
**ஆயர் அம்மா**

# வேதத்தில் வளர்ந்து, வேதத்தின்படி வாழ்வோம்

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியும், செயற்கை நுண்ணறிவின் (AI) வேகமான முன்னேற்றமும் நம் வாழ்க்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில், நம்மையும் நம் சந்ததியினரையும் உலகத்தின் தவறான தாக்கங்களிலிருந்து காத்து, சத்தியத்தில் நடத்துவதற்கு தேவனுடைய வார்த்தை உறுதியான வழிகாட்டியாக இருக்கிறது. "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளதுமாயிருக்கிறது" (எபிரெயர் 4:12). இயேசுவானவர் பிசாசினால் சோதிக்கப்பட்டபோதும் வேத வசனத்தை மேற்கோள் காட்டி அவனை மேற்கொண்டார். எனவே, தேவனுடைய வார்த்தையை அறிந்து, அதில் வளர்ந்து, அதன்படி வாழ்வது நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் மிகவும் அவசியம்.



### வேதத்தை நேசித்து வாசிக்க வேண்டும்

போராட்டங்களும் சவால்களும் நிறைந்த இவ்வுலகில் வாழும் நாம், தேவனுடைய வசனத்தை நம் இருதயத்தில் பதித்தவர்களாக இருக்க வேண்டும். அதற்கு முதல் படியாக, அனுதினமும் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவருடைய வசனத்தை வாசிக்க வேண்டும். அது ஒரு கடமையாகவோ சடங்காகவோ இருக்கக்கூடாது. "இன்று என் ஆண்டவர் எனக்கு என்ன போதிக்கிறார்? இந்த நாளை எதிர்கொள்ள அவர் காட்டும் வழி என்ன?" என்ற வாஞ்சையோடு வேதாகமத்தை வாசிக்க வேண்டும். "அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை" (சங்கீதம் 37:31). தேவனுடைய வார்த்தை நம் இருதயத்தில் நிறைந்திருக்கும்போது, நம் எண்ணங்களையும் செயல்களையும் அது வழிநடத்தும்.

### வேதத்தைத் தியானித்து, அதன்படி நடக்க வேண்டும்

வேதத்தை வாசிப்பதோடு நின்றுவிடாமல், வாசித்ததைத் தியானிக்க வேண்டும். "உம்முடைய வேதத்திலுள்ள அதிசயங்களை நான் காணும்படி என் கண்களைத் திறந்தருளும்" (சங்கீதம் 119:18) என்று ஜெபித்த சங்கீதக்காரனைப் போல நாமும் ஜெபத்தோடு வேதத்தை வாசிக்க வேண்டும். வேதம் ஒரு கண்ணாடியைப் போன்றது. அது நம்முடைய நிலையை நமக்கே காட்டி, திருத்தப்பட வேண்டியவற்றை உணர்த்துகிறது. எனவே, வேதத்தை அறிந்துகொள்வதோடு மட்டும் நின்றுவிடாமல், அது போதிப்பவற்றைக் கடைப்பிடித்து, தவறானவற்றை விட்டுவிட வேண்டும். "நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக்கோபு 1:22).

### பிள்ளைகளுக்கு கருத்தாய் போதிக்க வேண்டும்

உபாகமம் 6:6–7 கூறுவது போல, தேவனுடைய வார்த்தையை நம் இருதயத்தில் வைத்துக்கொண்டு, அதை நம் பிள்ளைகளுக்குக் கருத்தாய் போதிக்க வேண்டும். அவர்களின் வயதிற்கேற்ப வேதத்தை அறிமுகப்படுத்தி, ஒழுங்கான வேத வாசிப்பிலும்

தியானத்திலும் அவர்களை வழிநடத்த வேண்டும். நம்மைவிட நமக்குப் பின்வரும் சந்ததியினர் பல புதிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தொழில்நுட்பம், சமூக ஊடகங்கள் மற்றும் உலகத்தின் பல்வேறு தாக்கங்களின் மத்தியில் அவர்கள் சத்தியத்தில் நிலைத்திருக்க, தேவனுடைய வார்த்தை அவர்களின் இருதயத்தில் ஆழமாகப் பதிய வேண்டும். பிஞ்சு வயதிலேயே தேவனுடைய வார்த்தையை அவர்களின் இருதயத்தில் விதைப்போம். அப்பொழுது அவர்கள் சவால்களின் மத்தியிலும் விசுவாசத்தில் நிலைத்திருக்க முடியும்.



**வேதத்தில் வளர்ந்த வேதாகம நபர்கள்**

- **சாமுவேல்** – சிறுவயதிலேயே தேவனுடைய சந்நிதியில் வளர்ந்து, அவருடைய சத்தத்தைக் கேட்கக் கற்றுக்கொண்டான். *1 சாமுவேல்* 2:26; 3:1–10
- **தீமோத்தேயு** – சிறுவயதிலிருந்தே பரிசுத்த வேதத்தை அறிந்து வளர்ந்தான். *2 தீமோத்தேயு* 1:5; 3:14–15
- **யோசியா** – தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, தன்னைத் தாழ்த்தி, அதன்படி நடந்தான். *2 இராஜாக்கள்* 22:8–13; 23:1–3
- **யோசுவா** – தேவனுடைய வார்த்தையைத் தியானித்து, அதன்படி செய்யக் கற்றுக்கொண்டான். *யோசுவா* 1:7–8
- **தானியேல்** – இளமையிலேயே தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்து, உண்மையாக நிலைத்திருந்தான். *தானியேல்* 1:8; 9:2–4
- **தாவீது** – தேவனுடைய வார்த்தையை நேசித்து, அதில் தியானித்து வாழ்ந்தான். *சங்கீதம்* 1:1–3; 119:97
- **எஸ்றா** – தேவனுடைய நியாயப்பிரமாணத்தை ஆராய்ந்து, அதன்படி செய்து, மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுத்தான். *எஸ்றா* 7:10
- **அப்பொல்லோ** – வேதத்தில் வல்லவனாக இருந்து, இன்னும் தெளிவாகக் கற்றுக்கொண்டு வளர்ந்தான். *அப்போஸ்தலர்* 18:24–28

இம்முன்னோர்களைப் போல நாம் வேதத்தை நேசித்து, அதற்கு கீழ்ப்படிந்து வாழ்ந்து, பிறருக்கும் வேத வசனத்தை கற்றுக் கொடுப்போம். நம்முடைய வாழ்க்கை ஒரு நடமாடும் வேதாகமமாக இருப்பின், நம் ஒவ்வொரு செய்கையும் நம் குடும்பமும் நம்மை சுற்றியுள்ளவர்களும் வேதத்தை அறியவும் அதன்படி நடக்கவும் நிச்சயமாக உதவும்.

**வேதத்தில் வேரூன்றி, விசுவாசத்தில் வளர்ந்து, வேதத்தின்படி வாழ்வோம்!**

**ஜெபசீலி ஆசீர்**




# உல்தாள்

**[2 ராஜா.22:14-20, 2 நாளா. 34:22,23]**

யோசியா ராஜா எருசலேமை ஆட்சி செய்த நாட்களில் உல்தாள் என்ற தீர்க்கதரிசினி எருசலேமில் வாழ்ந்து வந்தாள். இவள் இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு 600 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து வந்தவள். இவள் கணவன் பெயர் சல்லூம். அவன் வஸ்திர சாலை விசாரிப்புக்காரன். உல்தாள் வாழ்ந்து வந்த காலத்தில் தான், எரேமியா, செப்பனியா போன்ற தீர்க்கதரிசிகள் வாழ்ந்து வந்தார்கள். உல்தாளின் பணி என்னவென்றால், எருசலேம் ஜனங்களுக்கு யெகோவா தேவனைப் பற்றி சொல்லி, தேவனை அறிய வைப்பது. இந்த உல்தாளை ஆண்டவர் இஸ்ரவேலின் எழுப்புதலுக்கு பயன்படுத்தினார். முழு தேசமும் மனம் திரும்பியது.

யோசியா ராஜா ஆட்சிக்கு வந்த பதினெட்டாம் ஆண்டு எருசலேம் தேவாலயம் பழுது பார்க்கப்பட்டது. அப்போது நியாயப்பிரமாண புஸ்தகம் ஆலயத்தில் ஆசாரியன் இல்க்கியாவால் கண்டெடுக்கப்பட்து. அதன்பிறகு இந்த புஸ்தகம் ராஜாவாகிய யோசியாவிடம் அனுப்பப்பட்டது. வாசிக்கப்பட்டது. ராஜாவை மனஸ்தாபப்பட வைத்தது. வேதத்தை வாசித்த ராஜாவின் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டது. தனது தவறையும் தனது ஜனங்களின் பாவங்களையும் உணர்ந்த ராஜா மிகவும் வருத்தமடைந்தான், ஜெபித்தான். தனது மக்களின் பாவத்தினால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு தவிர்க்க முடியாததாகிவிட்டதோ என அறிய விரும்பி இல்க்கியாவையும், சாப்பாவையும் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளிடம் விசாரிக்க அனுப்பினான். அவர்கள் உல்தாளிடம் சென்றார்கள். உல்தாள் கர்த்தரிடத்திலிருந்து வார்த்தைகளை பெற்று கர்த்தர் தனக்கு வெளிப்படுத்தினதை அப்படியே சொன்னாள். கேட்க வந்தவர்களிடம் உள்ளத்தில் பதியும்படியாக தெளிவாக, நேர்மையாக, ஒளிவு மறைவு இல்லாமல்

தைரியமாய் நியாயப்பிரமாணத்தில் சொல்லியுள்ள வார்த்தைகளை உறுதிப்படுத்தி ராஜாவின் நடைமுறைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னாள். இஸ்ரவேல் ஜனங்கள் நியாயப்பிரமாண வார்த்தைகளை அறிந்து அழிவிலிருந்து காக்கப்பட வேண்டும் என்ற தாகம் அவளுக்குள் இருந்தது. உல்தாளின் தீர்க்கதரிசங்கள் அப்படியே ராஜாவிடம் கொண்டு செல்லப்பட்டது. ராஜாவும், சகல குடிமக்களும் கர்த்தருடைய ஆலயத்திற்கு போனார்கள். நியாயப்பிரமாண புஸ்தகம் வாசிக்கப்பட்டது. ராஜா தன்னை கர்த்தருக்கு அர்ப்பணித்தார்கள். உடன்படிக்கை பண்ணினார்கள். தேசத்தில் காணப்பட்ட அருவருப்புகள் எல்லாம் அகற்றப்பட்டது. மக்கள் மனந்திரும்பினார்கள். இஸ்ரவேலிலே எழுப்புதல் உண்டாயிற்று.

சுவிசேஷத்தை அறிவிப்பது நமது கடமை. ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த வேண்டும். உல்தாள் ஒரு பெண்ணாக இருந்தாலும் தைரியமாய் தீர்க்கதரிசனம் சொன்னாள். இஸ்ரவேலின் இரட்சிப்புக்கு தேவன் உல்தாளை பயன்படுத்தினார். நம்மையும் பயன்படுத்துவார். வார்த்தைகளை தைரியமாய் மக்களுக்கு கொண்டு செல்வோம். நாமும் கர்த்தருடைய வார்த்தைகளை வாசிப்போம். அதன்படி நடப்போம். கர்த்தருடைய வார்த்தை நம் கால்களுக்கு தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. தேவனுடைய வார்த்தையில் வளருவோம். தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!

**ஷர்மிளா ராஜேஷ்**

## நவம்பர் மாத தலைப்பு

# உண்மையாய் வாழ்வோம் *[வெளி.2:10]*

# *Be faithful*




Dear Children,

This October the theme is "**LET US GROW IN SCRIPTURE**".

'Growing in Scripture' means learning God's Word, understanding it, and letting it guide the way we live. Just as our bodies grow when we eat healthy food, our hearts and faith grow when we read, hear, and obey the Bible.

The apostle Peter says - "Like newborn babies, crave pure spiritual milk, so that by it you may grow up in your salvation."— 1 Peter 2:2




## 🌱 5 Simple "How To" Points

1. 📖 **Read the Bible** - Read a small part of the Bible every day. *"Your word is a lamp for my feet."* — **Psalm 119:105**
2. 👂 **Listen carefully** - Listen when God's Word is taught in Sunday school and church. *"Faith comes from hearing the message."* — **Romans 10:17**
3. 💭 **Think about God's Word** - Ask, "What is God teaching me through this verse?" *"Meditate on it day and night."* — **Joshua 1:8**
4. ❤️ **Remember Scripture** - Learn Bible verses by heart and keep them in your heart. *"I have hidden your word in my heart."* — **Psalm 119:11**
5. 👣 **Obey what the Bible teaches** - Put God's Word into action by loving, forgiving, helping, and telling the truth. *"Do not merely listen to the word... Do what it says."* — **James 1:22**

## SAYING IT WITH PICTURES...

**GOD'S PRESCRIPTION** A Joyful 'toon by Mike Waters




My son, pay attention to what I say; listen closely to my words. Do not let them out of your sight, keep them within your heart; for they are life to those who find them and health to a man's whole body. — Proverbs 4:20–22 NIV

**GRACE CAFE´** A Joyful 'toon by Mike Waters




For no matter how many promises God has made, they are "Yes" in Christ. And so through him the "Amen" is spoken by us to the glory of God. - 2 Corinthians 1:20 NIV

## BOOKS OF THE BIBLE #9: 1 SAMUEL

**Author**: Unknown

**When It Happened**: About 1150–1055 BC

**Chapters**: 31

**Key People**: Samuel, Saul, Jonathan, David



## TINY TOTS SECTION

### COLOR IN…



## The bible is full of stories for little children.

## Fill in the gaps and then read a parable that Jesus told one day.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
|  Farmer |  Seeds |  Birds |  Rocks |  Weeds |  Word of God |  Good Ground |

A  ______________ sows  ___________ in a field. Some  __________ fall on the road, and the  _____________ quickly eat it. Some  ___________fall where there are  _____________ . The plants grow, but soon the sun dries them up. The plants die because there is no soil. Some  ______________ grow among  ______________. They stop the plants from growing, and the plants die.

But other  _____________falls on  ______________________. The plants grow well.

The  ______________ has a good harvest from these plants.

Jesus said that the  ___________ were the  _______________________________

Some children do not listen to ___________________________, or listen and forget.

**But some children Listen, Obey, and grow up as good Christian children in the Lord.**

**Which kind of child are you going to be today?**

**Follow the clues and help James and his family find their scriptures so they can read together!**










All Scripture is God-breathed and is useful for teaching, rebuking, correcting and training in righteousness, so that the man of God may be thoroughly equipped for every good work.
— 2 Timothy 3:16–17 NIV

# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "LET US GROW IN SCRIPTURE"

1. What should we do with God's Word? Ps.119:105

a. Ignore it. b. Hide it.
c. Forget it. d. Read it.

2. What is Scripture useful for? (2 Timothy 3:16)

a. Teaching. b. Argument.
c. Learning Law. d. Building Roads.

3. How does faith come? (Romans 10:17)

a. By Money. b. By hearing God's word.
c. By Winning d. Be studying Science.

4. What should we be like when we hear God's Word?? (James 1:22)

a. Forgetful. b. Doers.
c. Silent. d. Careless.

5. What is God's Word compared to (Ephesians 6:17)

a. A Sword. b. A Stone.
c. A Tree. d. A cloud.

6. What does Scripture help us become? (2 Timothy 3:17)

a. Rich and Famous. b. Powerful Rulers.
c. Equipped for Good Works. d. Great Athletes.

7. How should we desire God's Word? Like a __________ (1 Peter 2:2)

a. Bird desires Worm b. Student desires Games.
c. King desires Gold. d. Newborn baby desires Milk.

8. What happens when we meditate on God's law? (Psalm 1:2–3)

a. We become Famous. b. We become Fruitful.
c. We become Wealthy. d. We become Stronger.

9. What did Jesus say about His words? (John 6:63)

a. They are Difficult. b. They are Hidden.
c. They are Spirit and Life. d. They are only for Pastors.

10. What does knowing the truth do? (John 8:32)

a. Sets us Free. b. Makes us Powerful.
c. Makes us Famous. d. Causes Division.

11. How can a young person keep their way pure? (Psalm 119:9)

a. By becoming Famous. b. By following God's Word.
c. By avoiding People. d. By gaining Wealth.

12. What is God's Word like (Psalm 119:105)?

a. A Lamp b. A River. c. A Stone d. A Cloud

## THE BIBLE… IT'S SO MUCH MORE…

Preparing for a long trip, a traveler said to his friend: "I am just about packed.




I only have to put in a guidebook, a lamp, a mirror, a microscope, a telescope, a volume of fine poetry, a few biographies, a package of old letters, a book of songs, a sword, a hammer and a set of books I have been studying."

"But," the friend replied, "you can't get all that into your bag."

"Oh, yes I can," replied the traveler, "it doesn't take much room."

Then he placed his Bible in the corner of the suitcase and closed the lid.

## SELA IS READING THE SCRIPTURES WITH HER GRANDMA

Can you spot the differences between these two pictures?



# BIBLE
## CROSSWORD PUZZLE




**Across**

1. The angel who announced Jesus's birth
6. The disciple who walked on water with Jesus
7. The woman who became queen and saved her people
9. The strongest man in the Bible
10. The promised land flowing with milk and honey
12. The boy who defeated Goliath with a sling
14. Mary's husband and Jesus's earthly father
15. The Hebrew people were enslaved in this country
16. The prophet swallowed by a great fish
17. The last book of the Bible
18. King known for his wisdom

**Down**

2. The brother Moses worked with
3. The sea that Moses parted
4. The garden where Adam and Eve lived
5. The city whose walls fell after trumpets blew
8. Abraham's son who was nearly sacrificed
10. Moses received the Ten ____ on Mount Sinai
11. Noah built this to save his family
13. The first book of the Bible
14. The disciple who betrayed Jesus

Images (c) EduClips, Creative Clips, Deeder Do Designs

SUPERSTARWORKSHEETS

## Picture Puzzles

Solve the puzzles to figure out the missing words.

JESUS SAID,"IF ANYONE LOVES ME, HE WILL

________ ______ ________."

(JOHN 14:23)





# BE DOERS OF THE WORD!



## JAMES 1:22

"But be doers of the word, and not hearers only, deceiving yourselves."
James 1:22 (NKJV)

### 1. WORD SEARCH

Find the following words in the puzzle.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| O | B | E | D | O | E | R | S | W | O |
| B | I | B | L | E | O | B | E | Y | Q |
| L | I | S | T | E | N | H | E | A | R |
| K | I | N | D | N | E | S | S | T | Z |
| T | R | U | T | H | L | O | V | E | M |
| F | O | L | L | O | W | J | E | S | U |
| H | E | L | P | O | J | E | S | U | S |
| P | R | A | Y | F | A | I | T | H | U |

| | | | |
|---|---|---|---|
| DOERS | OBEY | LISTEN | BIBLE |
| KINDNESS | TRUTH | LOVE | JESUS |
| HELP | PRAY | FAITH | FOLLOW |



**READ IT.
OBEY IT.
LIVE IT!**

### 2. MATCH IT!

Draw a line to match each Bible truth with how we can do it.

| | |
|---|---|
| Love others • | • even when it's hard. |
| Tell the truth • | • when they are sorry. |
| Forgive others • | • by helping at home. |
| Help others • | • by saying kind words. |
| Obey God • | • because He loves us. |

### 3. FILL IN THE BLANK

Write the missing words from James 1:22.



But be ____________
of the ____________,
and not ____________ only,
____________ yourselves.

James 1:22 (NKJV)

WORD BANK

deceiving doers hearers word

### 4. WHAT CAN I DO?

Look at each picture. Write one way you can be a doer of God's Word.



____________________



____________________



____________________

### 5. COLOR THE PICTURE

Color the picture and the heart.










### BONUS!

Draw a picture of one way you can be a doer of God's Word.

Dear Jesus, help me not just hear Your Word, but obey it every day! Amen.

# PARABLE DECODED #9:




## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below…

1. The theme for the month of October is: _____________________________.
2. The book of Samuel was written about __________________ BC.
3. 2 Timothy 3:16 – 17 says _____________________________________________
   ____________________________________________________________________
   ____________________________________________________________________
4. From the picture above, what can we learn from the parable of the wise and foolish builder?
   i. ________________________ ii. ________________________________
   iii. ___________________________ iv. _____________________________
   v. __________________________
5. What can we learn about God from the book of 1 Samuel?
   ___________________________________________________________________
6. ______________ became a prophet, a priest and the last judge of Israel.

**Dear Children,**

**May the Holy Spirit help us to grow in Scripture, reading the Bible every day, and meditating on God's Word.** **God Bless, Mrs. Briliya Jeyaseelan.**

# Answers to September Children's Corner

## CHOOSE THE CORRECT OPTION – "LET US GROW TOGETHER IN UNITY"

1. c. We should live in Unity.
2. b. Christ.
3. a. Be Humble.
4. b. It has many members.
5. b. Serve one another.
6. c. Love.
7. b. Unity.
8. a. With Kindness.
9. a. The Church becomes stronger.
10. a. By serving one Another.
11. c. Care for them.
12. b. Unity.

## Complete the Short Review Below...

7. The theme for the month of September is: **LET US GROW TOGETHER IN UNITY**.
8. The book of Ruth has **4** chapters.
9. Rom. 15:5 says **May the God who gives endurance and encouragement give you the same attitude of mind toward each other that Christ Jesus had.**
10. What does the book of Ruth teach us about God?
    **_ God is sovereign in all things, and His purpose will be accomplished**
11. The Motto of our church- the CSI Tamil Parish, Abu Dhabi is **THAT THEY ALL MAY BE ONE**
12. Complete the table from the 'Growing Together' infographics in the previous page

| The Divided Kingdom (Pitfalls) | The United Kingdom (Pathway) |
|---|---|
| 1. Internal gossip & Drama | 1. Encouraging words |
| 2. Competition & Jealousy | 2. Shared Mission |
| 3.Focus on Differences | 3. Radical welcome and Diversity |

13. The Bible is a book of great diversity, yet it unfolds a single unified story, **the plan of Salvation for lost sinners which is revealed from Genesis to Revelation.**

**Note:** Submit hard copy of your Bible Quiz answers to Pastor Uncle or Aunty on or before the 25th of every month.
Please make sure to write your name on the answer sheet.
(⊘) Kindly do not send your answers via WhatsApp.

# வேத வினாக்கள்

## எண்ணாகமம் மற்றும் தூதுவிலிருந்து...

(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

1. யுத்தத்திற்கு புறப்படத்தக்கவர்கள் எத்தனை பேர்?
2. ஊசியேலின் குமாரர் யார்?
3. மோசேயின் மாமன் யார்?
4. எப்புன்னேயின் குமாரன் யார்?
5. ஆசாரியன் எதை ஊதவேண்டும்?
6. கர்த்தருடைய அக்கினி பற்றியெரிந்த இடத்தின் பெயர்?
7. ஐந்து சேக்கல் என்பது?
8. எலியாபின் குமாரன் பெயர் என்ன?
9. கர்த்தருக்குரிய பஸ்கா எப்போது அனுசரிக்கவேண்டும்?
10. யாவீர் கிராமத்திற்கு என்ன பெயரிட்டான்?
11. ஆரோன் எத்தனை வயது வரை உயிர்வாழ்ந்தார்?
12. ஓர் மலை எந்த தேசத்தின் எல்லை அருகே இருந்தது?
13. நகசோன் யாருடைய மகன்?
14. ஆசாரிப்புக்கூடாரத்தில் யாருடைய பணி மகாபரிசுத்தமானது?
15. 6 லட்சம்பேர் எந்த படையில் இருந்தார்கள்?
16. வெண் குஷ்டம் யாருக்கு வந்தது?
17. செபுலோன் சந்ததியின் சேனாபதி யார்?
18. வடபுறத்தில் யாருடைய பாளையத்துக்கொடி இறங்கவேண்டும்?
19. எஸ்லோல் பள்ளத்தாக்கு என பெயர் வரக்காரணம் என்ன?
20. எலெயாசாரின் மகன் பெயர் என்ன?
21. வேதத்தில் வளர்வோம், வாழ்வில் ......................
22. வேதத்தை யாரைப்போல வாஞ்சிப்போம் என்று குறிப்பிடப்பட்ட பெயர் என்ன?
23. வேதத்தை வாசிப்போம் என்ற பகுதியில் குறிப்பிடப்பட்ட வசனம் என்ன?
24. ஜெபத்தின் மேன்மைப் பகுதியில் குறிப்பிடப்பட்ட வசனம் என்ன?
25. ஜெபத்தின் வல்லமைப் பகுதியில் குறிப்பிடப்பட்ட வசனம் என்ன?

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**

# செப்டம்பர் வேதவினாக்கள் – பதில்
# லேவியராகமம் (முழுவதும்)

வேத வினாக்கள்

1. 49 வருஷம் 25: 8
2. நாதாபும், அபியூவும் 10:4
3. ஆசரிப்பு கூடாரத்திலிருந்து 1:1
4. முதலாம் மாதம் 14ஆம் தேதி அந்தி நேரம் 23:5
5. சபை 8:4
6. ஆசாரியரில் ஆண் மக்கள் 7:6
7. ஏழு 8:35
8. போஜன பலி 9:4
9. செலோமித் 24:11
10. பாவ நிவாரண பலி 9:3
11. சர்வாங்க தகன பலி 9:3
12. அக்கினி 10:2
13. தகன பலி 2:9, 13,17
14. ஆழாக்கு 14:12
15. 50 வெள்ளி சேக்கல் 27:16
16. 20 சேக்கல், 10 சேக்கல் 27:5
17. வட்டிக்கு 25:37
18. பத்தில் இரண்டு பங்கு 24:5
19. சோலையாம், அர்கொல், ஆகாபு 11:22
20. ஆசாரியர் 6:26
21. கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறவன் 24:16
22. அசறு 13:6
23. ஆறாம் 25:21
24. இஸ்ரவேல் புத்திரருக்கு, சீனாய் வனாந்திரம் 7:38
25. ஸ்தோத்திர பலியை 22:29

*குறிப்பு : அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் எழுதிய விடைத்தாள்களை ஒப்படைக்கவும். தயவுசெய்து WhatsApp மூலம் பதில்களை அனுப்புவதை தவிர்க்கவும்.*

# செப்டம்பர் மாத வேத வினாக்களுக்கான பதிலளித்தவர்கள்

1. Mrs. Ajita Ebi
2. Mrs. Adela Ezra
3. Mrs. Asha Shalini
4. Mrs. Blessy Lipny
5. Mrs.Desigta Jaison
6. Mr.Emmanuel vanya(Ruwais)
7. Mrs.Febell Jeevagi Thomas
8. Mrs.Geetha kannan
9. Mrs.Helen Sharmila Ray
10. Mr.Jeba Jino
11. Mrs.Jasmine Sobha
12. Mrs.Jebaseeli Asir
13. Mrs.Dr. Jenila Gannraj.L
14. Mrs.Jacqulin Rani
15. M. R. Masiha Starlin
16. Mrs. Malar Ernast
17. Mr.Merlin Jeba Kinis
18. Mrs.Nandhini Rajkumar
19. Mr.Prawin Durai Sam (Ruwais)
20. Mrs.Priya Ranjith Kumar
21. Mrs.Persis John
22. Mrs.Peppin Jenson
23. Mrs.Sarah Manuel
24. Mrs.Sheeba Herlin
25. Mrs.Sheneegah Stanly
26. Mrs.Sharmila Rajesh
27. Mrs.Selvi George
28. Mrs. Subi Kishor
29. Mrs. Subija Jino
30. Mrs.Sweetilin Frank
31. Mrs. Shajeethe Gracy
32. Mrs. Shiny Allwin
33. Mrs. Suni Smila Edwin
34. Mrs. Vithya Dinesh

# Children who answered September -2026 Quiz

1. Aadhav Steve Matthew
2. Adelyn Victoria Jeyaseelan
3. Alton kim Kinis
4. Albern
5. Aleina
6. Andrea kim Kinis
7. Anana Natalie
8. Benson Immanuel Raj
9. Berakah Jessy Rajkumar
10. Brightson Timothy Raj
11. Clement Dave
12. Daniel Vanya (RUWAIS)
13. Danion Lemuel
14. Defina
15. Diyas Dinesh
16. Evangelia Sharon
17. Evaniya Sherin
18. Evelyn Loria V
19. Giana Elin
20. Hadriel Adventier
21. Jadon Darius Ruwais]
22. Janey Titus
23. Jaslin Shanna
24. Jaylan Paul Jino
25. Jeffrey Samuel
26. Jen Scudd
27. Jenessa Johnson
28. Jevlyn Ana
29. Jim Scott
30. Joanna Paul Jino
31. Joha Anit Manuel
32. Johan Sam Manuel
33. Johanan Paul Jino
34. Kavi yalini
35. Kavin Immanel
36. Kev Shannen P.S(Ruwais)
37. Leona Juliet
38. Leonel I.J. Stalin
39. Liana Erin
40. Linuel I.J. Sherwyn
41. Mishael Wesley
42. Nijolin Jose
43. Pristina samlynPrince
44. Rivqah Deby Rajkumar
45. Starlyne Noble
46. Steffi Priscilla .R



# இயேசுவின் சீடர் தோமா

***இந்தியாவின் அப்போஸ்தலர்***

## கொடுங்கல்லூர் சபை

தன் சாட்சியை மக்களோடு பகிர்ந்ததோடு மட்டுமல்லாது, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்க்கை முறை, போதனை, ஊழியம், அவரது சிலுவை மரணம் மற்றும் அவருடைய உயிர்த்தெழுதல் போன்ற சத்தியங்களையும் அவர்களிடம் விவரித்துச் சொன்னார். அதைக் கேட்ட யூதர்களில் சுமார் 40 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தோமாவிடம் ஞானஸ்நானமும் பெற்றுக் கொண்டனர்.

தோமா சுமார் ஒன்றரை வருட காலம் அங்கு ஊழியம் செய்து, ஒரு திருச்சபையை ஸ்தாபித்து, ‘மாலிக்காயில்’ என்பவரை போதகராக நியமித்தார். இவர் தோமாவுடன் சேர்ந்து ஊழியம் செய்தபடியால், ‘தோமா மாலிக்காயில்’ என தனது பெயரை மாற்றிக் கொண்டார்.

மாலிக்காயில் அப்பகுதியில் ஆட்சி செய்து கொண்டிருந்த சிற்றரசனையும், அவரது மருமகனையும் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தி, அவர்கள் இருவருக்கும் தோமா ஞானஸ்நானமும் கொடுத்தார். பின்பு அந்த அரசனுக்கு, ‘அந்திரேயா’ என்றும், அவரது மருமகனுக்கு, ‘கேபா கொல்லம்’ என்றும் பெயர் சூட்டினார்.

## சிலுவைச் சின்னம்!

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட ஜனங்கள் சத்தியத்தைக் கேட்க தினமும் கூடி வருகிற ஒரு இடத்தில், தோமா மரத்தாலான ஒரு சிலுவையை செய்து வைத்தார். அந்த சிலுவையை ஒரு விக்கிரகமாக மாற்றி விடக்கூடாது என் அந்த ஜனங்களுக்கு மிகக் கண்டிப்புடன் கட்டளையிட்டார்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாக, அந்த ஜனங்கள்

மரங்களை தெய்வமாகக் கருதி வணங்கியதால், மரத்தால் செய்யப்பட்ட சிலுவையையும் கடவுளாக எண்ணி வணங்கி விடக்கூடாது என்கிற நல்லெண்ணத்தில் மிகவும் உறுதிபட எச்சரித்துச் சொன்னார்.

விசுவாசிகள் அனைவரும் தங்கள் சிலுவையை எடுத்துக் கொண்டு இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும் சீடர்களாக மாற அவர்களை பல விதங்களில் தோமா பயிற்றுவித்தார்.

இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" (மத்தேயு 16:24) என்று சொன்னார்.

தோமா அந்த சிலுவையை ஜனங்களுக்குக் காண்பித்துக் கொடுத்து, "உங்களுடைய பழைய மனுஷன் இயேசு கிறிஸ்துவோடு கூட சிலுவையில் அறையப்பட வேண்டும்" என்றும், "சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவைப் பற்றியே அதிகமாக சிந்திக்க வேண்டும்" என்றும், சிலுவையில் இயேசு கிறிஸ்து சிந்திய அவரது இரத்தத்தின் வல்லமையையும் குறித்தும் ஜனங்கள் புரிந்து கொள்ளும் வகையில் மிக எளிய முறையில் பிரசங்கித்தார்.

**சிலுவையின் மகத்துவம்**

இங்கு மாத்திரமல்ல, தான் இயேசு கிறிஸ்துவை அறிவித்து வந்த எல்லா இடங்களிலுமே தோமா சிலுவையை ஏற்படுத்தி, அதன் மூலமாக, ஜனங்களை தங்களின் பாவங்களுக்காக சிலுவையில் மரித்த இயேசு கிறிஸ்துவை மாத்திரமே நோக்கிப் பார்க்கும்படி செய்தார்.

தோமாவும் சிலுவையின் அன்பை தினமும் தியானித்து, இயேசு கிறிஸ்துவின் அன்பால் நெருக்கி ஏவப்பட்டு, மிகத் தீவிரமாக நற்செய்தி அறிவிப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். ஜங்கள் யாவரும் சிலுவையைப் பார்க்கும்போது, தங்களுக்காக சிலுவையில் ஜீவன் தந்த இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் அன்பை நினைத்து அவரைத் துதித்தனர்.

பல விதமான பாவங்களில் சிக்குண்ட ஜனங்களில் அனேகர், சிலுவையில் மரித்த இயேசு கிறிஸ்துவைப் பற்றிய தோமாவின் உபதேசத்தைக் கேட்டு, தங்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாக, சிலுவைக்கு முன்பாக நின்று, இயேசு கிறிஸ்து சிலுவை மரத்தில் தங்கள் பாவங்களுக்காக மரித்ததை எண்ணி, கதறியழுது மனந்திரும்பினர்.

**பாலையூர் சபை!**

தோமா கிரங்கனூரிலிருந்து பாலையூருக்கு வாய்க்கால் வழியாக படகு மூலம் சென்றார். அங்குள்ள ஒரு மலைப் பகுதியான, ஜூடக்குந்து என்கிற இடத்தில் வசித்த தன் இனத்தவர்களான சில யூதர்களை சந்தித்து, அவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தார். பின்பு அங்கிருந்த புற ஜாதி மக்களுக்கும் நற்செய்தியை அறிவித்து வந்தார்.

- **தொடரும்**




# பாமாலை 254 – களிப்புடன் கூடுவோம்
# (Let us with a gladsome mind)

1. களிப்புடன் கூடுவோம்
கர்த்தரை நாம் போற்றுவோம்
அவர் தயை என்றைக்கும்
தாசரோடு நிலைக்கும்.

2. ஆதிமுதல் அவரே
நன்மை யாவும் செய்தாரே
அவர் தயை என்றைக்கும்
மாந்தர்மேலே சொரியும்.

***'கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது'. சங் 36:1***

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், யூத ஜனங்களின் தெய்வ வழிபாடுகளில் சங்கீதங்களே பாடல்களாக உபயோகிக்கப்பட்டுவந்தன. ஒவ்வொரு வசனமும் இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு சபையாரின் ஒரு பகுதியினர் முதல் பாகத்தையும் மற்ற பகுதியினர் இரண்டாம் பாகத்தையும் வாத்தியக் கருவிகளுடன் பாடிவந்தனர். 120ம் சங்கீதம் முதல் பல சங்கீதங்கள் 'ஆரோகண சங்கீதம்' என்னும் தலைப்பைக் கொண்டவை. இவை யூத ஜனங்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வரும்போதும், தேவாலயப் பிரகாரங்களில் செல்லும்போதும், பண்டிகைக்காலங்களில் எருசலேமுக்குச் செல்லும்போதும் பாடிக் கொண்டு போவதற்காக எழுதப் பட்டவை. கிறிஸ்தவ வழிபாடுகளிலும் முதலில் சங்கீதங்களே பாடப்பட்டு வந்தன. நமது பாட்டுப் புத்தகங்களிலும், சங்கீதங்களைத் தழுவி எழுதப்பட்ட அனேக பாடல்களைக் காணலாம். 136ம் சங்கீதம், கடவுள் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணி, பார்வோனுடைய சேனைகளை சிவந்த சமுத்திரத்தில் அழித்து, கானான் தேசத்திலுள்ள பல ராஜாக்களை அழித்து, அத்தேசத்தை அவர்களுக்குச் சுதந்திரமாகக் கொடுத்ததற்காகவும் அவரைத் துதித்துப் பாடப்பட்டிருக்கிறது.

1623ம் ஆண்டு, ஜான் மில்ட்டன் (John Milton) என்னும் பிரபல ஆங்கிலக் கவிஞர் தனது திருமறையைப் படித்துக் கொண்டு இருக்கையில், சங்கீத புத்தகத்திலுள்ள பல சங்கீதங்கள் பாடல் ரூபத்தில் அமையக்கூடியதாக இருப்பதைக் கண்டார். அவற்றில் 136ம் சங்கீதத்தில் ஒவ்வொரு வசனமும் 'அவர் கிருபை என்றுமுள்ளது' என்னும் பல்லவியோடு முடிவடைவதைப் பார்த்தவுடன், அதே விதமான பல்லவியோடு முடிவடையும் ஒரு பாடல் எழுத ஆவல் கொண்டார். ஆகவே, 26 வசனங்கள் கொண்ட அந்த சங்கீதத்தை 24 கவிகள் கொண்ட ஒரு பாடலாக எழுதி முடித்தார். இப்பாடலே 'களிப்புடன் கூடுவோம்' என்னும் பாடலாகும். இதிலுள்ள எல்லா கவிகளும் மிகச் சிறந்ததாய் இருப்பினும், பாட்டுப் புத்தகத் தொகுப்பாளர்கள் நான்கு அல்லது ஐந்து கவிகளை மட்டும் சேர்த்துக்கொண்டனர். இப்பாடல் கிறிஸ்தவ மாநாடுகளில் ஒரு துதிப்பாடலாகவும், அன்பின் விருந்துகளில் நன்றிகூறும் பாடலாகவும் பாடப்பட்டு வருகின்றது.

இப்பாடலை எழுதிய ஜான் மில்ட்டன் 1608ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் தேதி லண்டன் மாநகரில் பிறந்தார். இவரது தந்தை ஓர் எழுத்தாளர். இளம் வயதிலேயே மகனுடைய சிறந்த திறமையையுணர்ந்து, நல்ல கல்வி பயில வசதியளித்தார். முதலில் தூய பவுல் பள்ளியிலும், பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்றார். அவரது சிறந்த ஒழுக்கத்தையும், நேர்மையான நடத்தையையும் கவனித்த அவரது உடன் மாணவர் அவரை, 'கிறிஸ்துவின் மனையாட்டி' (Lady of Christ's) என அழைத்தனர். தமது வாழ்க்கையில் அவர் கவிஞராகவும், கட்டுரையாளராகவும், ஆசிரியராகவும் இருந்தார். சிறிது காலம் அவர் அரசாங்கத் துறையில் லத்தீன் மொழி மேற்பார்வையாளராகவும் பணியாற்றினார்.

மில்ட்டன் 1652 முதல் கண்பார்வையை இழந்தபோதிலும், கவிகள் எழுதுவதைக் கைவிடவில்லை. அவர் கவிகளைச் சொல்லும்போது, அவரது மகள்கள் அவற்றை எழுதி வைத்தனர். அவர் எழுதிய கவிகளில் மிகச் சிறந்ததாகப் போற்றப்படுவது 1667ல் அவர் வெளியிட்ட, 'Paradise Lost' என்னும் ஆங்கிலக் காவியமாகும். ஆங்கிலக் கவிஞர்களில் ஷேக்ஸ்பியர் என்பவருக்கு அடுத்தபடியாக ஜான் மில்ட்டன் வைக்கப்பட்டுள்ளார்.

ஜான் மில்ட்டன் 1674ம் ஆண்டு, நவம்பர் மாதம், 8ம் தேதி தமது 66வது வயதில் மறுமைக்குட்பட்டார். அவரது உடல் தூய ஜைல்ஸ் (St. Giles) ஆலயத்தில் அடக்கம் பண்ணப்பட்டது. அவரது ஞாபகார்த்தமாக லண்டன் மாநகரிலுள்ள, 'வெஸ்ட் மின்ஸ்டர் அபே (Westminster Abbey)' என்னும் பேராலயத்தில் ஒரு நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டிருக்கிறது.




| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 2 | வெள்ளி | 8.30 pm – 10.30 pm | Church Day & Choir Day - தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 4 | ஞாயிறு | 11.00 am – 1.00 pm | உபவாச ஜெபம் |
| | | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் |
| 6 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 9 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 10.30 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 11 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – முசாபா |
| 13 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 16 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 10.30 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 18 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 20 | செவ்வாய் | 8.30 pm – 10.30 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 23 | வெள்ளி | 8.30 pm – 10.30 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 27 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 30 | வெள்ளி | 8.30 pm – 10.30 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 31 | சனி | 11.45 pm – 12.00am | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |




| | |
|---|---|
| **02-10-26** | |
| பாமாலை – 15 | அலங்கார வாசலாலே |
| பாமாலை – 172 | சபையின் அஸ்திபாரம் |
| கீர்த்தனை – 302 & 303 | ஆனந்தமே! ஜெயா! ஜெயா!<br>எந்நாளுமே துதிப்பாய் |
| பாமாலை – 261 | எல்லாருக்கும் மா உன்னதர் |
| **09-10-26** | |
| பாமாலை – 6 | என் நெஞ்சமே, நீ மோட்சத்தை |
| பாமாலை – 311 | சிலுவை சுமந்தோனாக |
| கீர்த்தனை – 376 & 383 | இயேசு அழைக்கிறார்<br>ஸ்தோத்திரம் இயேசு நாதா |
| கீர்த்தனை – 8 | தெய்வன்பின் வெள்ளம் |
| **16-10-26** | |
| பாமாலை – 375 | நீரோடையை மான் வாஞ்சித்து |
| பாமாலை – 329 | அருள்நாதா நம்பி வந்தேன் |
| கீர்த்தனை – 203 & 86 | வாராவினை வந்தாலும் சோராதே |
| கீர்த்தனை – 248 | வந்து நல்வரம் தந்தனுப்பையா |
| **23-10-26** | |
| பாமாலை – 4 | உன்னதரே நீர் மகிமை |
| பாமாலை – 293 | நிர்ப்பந்தமான பாவியாய் |
| கீர்த்தனை – 137 & 124 | பாவியாம் எனை மேவிப்பார் ஐயா<br>வா, பாவீ, மலைத்து நில்லாதே |
| பாமாலை – 8 | தந்தாய்! உம்மைத் துதித்தே |
| **30-10-26** | |
| பாமாலை – 11 | மகா அதிசயங்களை |
| பாமாலை – 239 | இயேசு கற்பித்தார் ஒளி வீசவே |
| கீர்த்தனை – 268 & 129 | பாலர் ஞாயிறிது பாசமாய் வரும்<br>மகனே, உன் நெஞ்செனக்குத் |
| கீர்த்தனை – 320 | மங்களம் சதா – ஜெய மங்களம் |




| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 02-10-26 | இறை மக்கள் அனைவரும் திருப்பணியாளரே | எண். 11:24-30 | அப். 6:1-7 | யோவான் 15:12-19 | 92 |
| 09-10-26 | வலுவின்மையில் வலிமை:நம் வாழ்வில் கடவுளின் கிருபை | ஏசாயா 35:1-10 | 2 கொரி. 12:1-10 | யோவான் 9:1-7 | 34 |
| 16-10-26 | நிலைபுரியாத சூழலில் கடவுளை நம்புவது | எரேமியா 29:10-14 | எபிரேயர் 11:17-23 | மாற்கு 4:35-41 | 37:30-40 |
| 23-10-26 | சீர்திருத்தம் – புதுப்பிப்பதற்கான அழைப்பு | 2 இராஜா. 23:1-8 | நீதி. 3:3-8 | லூக்கா 5:36-39 | 119:25-32 |
| 30-10-26 | ஒளியாய் இருங்கள் | தானி. 3:20-30 | பிலிப்பியர் 2:14-16 | மத்தேயு 5:22-24 | 119:9-16 |




| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 06-10-25 | ஏசாயா | 3 : 1-13 | Al Wadha |
| 13-10-25 | ஏசாயா | 3 : 14-26 | Hamdan |
| 20-10-25 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 27-10-25 | ஏசாயா | 4:1-6 & 5:1-6 | Muroor |

| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mr. | Leslie Manohar Isaac. W |
| 1 | Mr. | J. Manuel Raj John |
| 2 | Mr. | Manohar Rajapandi |
| 2 | Dr. | Rajakumar Manickam |
| 2 | Mr. | Yesudian Nayagam Eban |
| 3 | Ms. | Gabrilyn Hannah |
| 6 | Mrs. | Sheeba Herlin. S |
| 6 | Mrs. | Victory A |
| 7 | Mr. | Camryn Robert |
| 7 | Master | Kavin Immanuel Arun |
| 8 | Mr. | Ranjith Kumar. J |
| 8 | Mr. | Abish |
| 9 | Mr. | Yuvesh Ray |
| 9 | Master | Fabian Alam |
| 11 | Mrs. | Jebaseeli Idah Hannah |
| 11 | Mrs. | Hepsiba Jeni. M |
| 13 | Miss | Diyas Dinesh |
| 14 | Mr. | Abishek Samuel |
| 14 | Mrs. | Esther Pauline Rani |
| 15 | Master. | Kevin Paul Crishanth |
| 16 | Mrs. | Sheneegah Stanly |
| 20 | Master. | Alston Elvin Paul |
| 20 | Mrs. | Patricia Santhi L |
| 20 | Mr. | Sundar Jebakumar T. |
| 21 | Baby | Berakah Jessy |
| 22 | Master. | Joshua Mahear |
| 22 | Ms. | Niwisha |
| 23 | Mr. | Ramesh Prabahardhas |
| 23 | Master. | Jahziel Brayden |
| 23 | Baby | Cayden Reuel |
| 23 | Mrs. | Padma Brin |
| 24 | Mr. | Selvin Franklin N |
| 24 | Ms. | Melki |
| 25 | Mr. | John Beno |
| 28 | Mrs. | Amija Behin |
| 29 | Ms. | Jen Scudd |
| 29 | Master | Benson Immanuel Raj |
| 29 | Mrs. | Lavina Daniel |
| 30 | Miss. | Arlin Sheya |
| 31 | Master | Eion Jayden |
| 31 | Mr. | Edwin |

# HAPPY ANNIVERSARY

| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 2 | Mr. & Mrs. | Rajesh T |
| 2 | Mr. & Mrs. | Vivin Alfred |
| 19 | Mr. & Mrs. | Edwin |
| 21 | Mr. & Mrs. | Jose Wesly. J |

## புதிய அங்கத்தினர்களின் சேர்க்கை விவரம்

Welcome New Members

| S.No. | Name | Mem. No. |
|---|---|---|
| 1 | Mr. Richard Nickson | 527 |
| 2 | *Mr.* D. Daniel | 528 |




Junior Church Retreat

# ஆசிரியர் தின சிறப்பு ஆராதனை





# ஆண்கள் ஐக்கிய சங்க சிறப்பு ஆராதனை






திருச்சபை
ஆண்டுவிழா
“நீங்கள் இரட்சிப்பிற்கேதுவாக வளரும்படி,
புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல,
திருவசனமாகிய களங்கமில்லாத
ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்”
1 பேதுரு 2:2
HOLY BIBLE